**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV ,BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.733/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 2 |
| Name | : | லீலாவதி, வயது 49 |
| Father Name/Husband Name | : | ராமசந்திரன் |
| Village | : | குணசேகரபுரம் |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | கூலி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of February 2026.

**(A1 – A3 present. A4 absent. 355 BNSS petition filed and allowed ).**

**<u>முதல் விசாரணை</u>**

1 நான் தற்போது குணசேகரபுரத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் இல்லாத 4 வது எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 எனது மகன். கடந்த 01.04.2025 அன்று இரவு 12.30 மணிக்கு நானும், எனது கணவரும் வீட்டில் இருந்தோம். எனது மகன் அ.சா.1 வெளியே போய் இருந்தான். சுமார் 30 நிமிடம் எனது மகனை காணவில்லை. அதனால் நானும், எனது கணவரும் அ.சா.1 யை தேடி சென்றபோது எனது மகன் அடிவாங்கி இரத்தத்துடன் வந்தார். அப்போது எனது மகனின் பின்னால் எதிரிகள் நான்கு பேரும் வந்தார்கள். எனது மகன் என்னை சேர்த்து பிடித்து கொண்டான்.

2 1 வது எதிரி அரிவாள் வைத்து அ.சா.1 ன் வலது பக்க நெற்றியில் வெட்டினார். 2 வது எதிரி டியூப்லைட் சட்டத்தால் எனது மகனின் வலது கால், தொடையில் அடித்தார். ஆஜர் இல்லாத 4 வது எதிரி சைக்கிள் செயின் போன்ற ஒன்றை வைத்து எனது மகனின் உடல் முழுவதும் அடித்தார். 3 வது எதிரி அடிங்க அடிங்க என்று சொல்லி கொண்டிருந்தார். அதன் பிறகு எனது மகனுக்கு மயக்கம் ஏற்பட்டு நாங்கள் 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்தோம். இங்கே இருந்தால் வெட்டி கொன்று விடுவோம் என்று 1 வது எதிரி சொன்னதால் நாங்கள் ஊரை விட்டு கிளம்புவதற்கு ஆட்டோவில் போன போது 1 வது எதிரி ஆட்டோவிற்கு முன்பு தீ வைத்தார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகளுக்கு பயந்து நாங்கள் தற்போது கோவில்பட்டியிலே இருக்கிறோம். ஊருக்கு செல்லாமல் இருக்கிறோம்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

3 எனது மகன் கொத்தனார் வேலை பார்க்கிறார். அதனால் அவருக்கு குடிபழக்கம் உண்டு என்றால் வாரத்திற்கு ஒருமுறை குடிப்பார். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் அன்று எனது மகன் குடித்திருந்தார் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளில்தான் மாரியப்பன் என்பவரின் பேத்தியின் நன்னீராட்டு விழா நடைபெற்றது என்றால் சரிதான். அதனால் அந்த விழாவுக்கு 10,20 நபர்கள் போக வர சென்றார்கள் என்றால் சரிதான், இரவு 10.00 மணிக்கு பிறகு போக்குவரத்து நபர்கள் இல்லை. எனது மகனும் அந்த விழாவுக்கு சென்றார் என்றால் சரியல்ல. எனது மகன் வீட்டை விட்டு கிளம்பும்போது மணி சுமார் 11.30 மணி இருக்கும். அ.சா.1 எங்கே சென்றார் என்று எனக்கு தெரியாது என்றால் அவருடைய பாட்டி வீட்டில்தான் இருப்பார்.

4 பாட்டி வீட்டிற்கும், நான் குடியிருக்கும் வீட்டிற்கும் இடையில் 20 வீடுகள் இருக்குமா என்றால் 30 வீடுகள் இருக்கும். அதனால் அந்த இடைப்பட்ட காலத்தில் என்ன நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் நாங்கள் அ.சா.1யை தேடி போன பிறகுதான் தெரிந்து கொண்டோம். அதனால் முதலில் நடந்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன விதத்தில்தான் காயம் ஏற்பட்டதாக போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்தவுடன் எனது மகன் மயங்கி விட்டான் என்றால் சரிதான். மறுநாள்தான் எனது மகனுக்கு மயக்கம் தெளிந்தது என்றால் சரிதான். அதனால் வழக்கு சம்பவம் குறித்து போலீசார் என்னிடமும், எனது கணவரிடமும் எழுத்து மூலமாக புகார் பெற்றார்கள் என்றால் சரிதான்.

5 அந்த புகாரின் அடிப்படையில்தான் எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, எனது மகன் கொடுத்த புகாரில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் முதலில் கொடுத்த புகாரில் முதல் விசாரணையில் சொன்ன விதத்தில் காயம் ஏற்பட்டதாக சொல்லியிருந்தேன் என்றால் சரிதான். எதிரிகள் மிரட்டியதால் ஊரை விட்டு சென்றுவிட்டதாக போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தற்போதுதான் எதிரிகள் மிரட்டியதாக முதன்முதலில் சொல்கிறேன் என்றால் சரிதான். சம்பவ காலத்தில் எனது மகன்தான் குடிபோதையில் தகாத வார்த்தைகளால் சொல்லி, மற்ற நபர்களை ஏசினார் என்றால் சரியல்ல. ஊர்காரர்களும், 1வது எதிரியும் அ.சா.1ன் அட்டுழிங்களை போலீசார் தகவல் சொல்வதால் அதை மனதில் வைத்து எனது மகன் குடிபோதையில் தவறி விழுந்த காயத்தை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால்

சரியல்ல. எதிரிகள் எந்த காலத்திலும் எனது மகனுக்கு கொலை மிரட்டல் விடுத்து காயம் ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.